04.06.15

**உள் மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு: சென்னையில் 100 டிகிரி வெயில்**

தமிழகத்தின் உள் மாவட்டங்களில், வியாழக்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: புதன்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் பரவலாக மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, வேலூர் மாவட்டம் வாணியம்பாடி, ஏலகிரியில் அதிகபட்சமாக 110 மி.மீட்டர் மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக பவானிசாகர், ஆலங்காயம், சாத்தனூர் அணை, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் பரூர் ஆகிய இடங்களில் தலா 60 மி.மீ, செங்கம், போச்சம்பள்ளி, குடியாத்தத்தில் தலா 50 மி.மீட்டர் மழை பெய்தது. வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பல இடங்களிலும், கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி, மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய

மழை பெய்யும். அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 97, 82 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். சென்னையில் 100 டிகிரி: வெப்ப நிலையைப் பொருத்தமட்டில், தமிழகத்திலேயே சென்னையில் புதன்கிழமை அதிகபட்சமாக 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவானது. அதற்கு அடுத்தபடியாக கரூர் பரமத்தியில் 99-ம், பாளையங்கோட்டையில் 98 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மற்ற மாவட்டங்களில் 99 டிகிரிக்கும் குறைவாகவே வெயில் பதிவாகியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**லாபம் தரும் தினை சாகுபடி**



சிறுதானிய வகைகளில் ஒன்றான தினை பயிரிட்டால் அதிக அளவில் லாபம் கிடைக்கும். பொதுவாக, தினை கடுமையான வறட்சியையும் தாங்கி வளரக் கூடியது. ஆடி, புரட்டாசிப் பட்டம் இந்தப் பயிருக்கு ஏற்றதாகும். மனிதன் 40 வயது முதல் சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், சத்து குறைபாடு உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு ஆளாகிவருவதால், சிறுதானியங்களை உண்பது அதிகரித்து வருகிறது. மக்கள் அதிகம் பயன்படுத்தும் பொருளாக தினை உள்ளதால், சந்தையில் எப்போதும்

விற்பனை வாய்ப்பு அதிகம் இருக்கும். "லவ் பேட்ஸ்' எனப்படும் காதல் பறவைகளுக்கும் மிகவும் பிடித்தமான தீனி தினையாகும். தற்போது கடைகளில் ஒரு கிலோ தினை ரூ. 80 முதல் ரூ. 90 வரை விற்கப்படுகிறது.

தினை சாகுபடிக்கு ஏற்ற நிலம்: செம்மண், இருமண் கலந்த மண் சிறந்தது. கோடை மழையை பயன்படுத்தி பயிர் அறுவடைக்குப் பின்பு நிலத்தை சட்டிக் கலப்பையைக் கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். கோடை உழவால் மண் அரிமானம் தடுக்கப்பட்டு, மழைநீர் சேமிக்கப்படுவதுடன் கோடை மழையில் முளைக்கும் களைகள் கட்டுப்படுத்தப்படும். நிலத்தடியில் இருக்கும் கூட்டுப் புழுக்கள் உழவின்போது மேலே கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுவதால் பயிர்க் காலத்தில் பூச்சிகளின் தாக்குதல் குறையும். விதை அளவு: தினை விதையை வரிசையாக விதைத்தால் ஒரு ஹெக்டேருக்கு 10 கிலோ தேவைப்படும். விதையைத் தூவினால் ஒரு ஹெக்டேருக்கு 12.5 கிலோ தேவைப்படும்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 25 செ.மீட்டரும், செடிக்குச் செடி 10 செ.மீட்டரும் இருக்க வேண்டும். விதை விதைப்பு: கை விதைப்பு அல்லது விதைப்பான் கருவி கொண்டு வரிசையாக விதைப்பு செய்யலாம். இப்படிச் செய்வதால் அதிக பரப்பில் மண் ஈரம் காயும் முன்பே விதைத்து முடிக்கலாம். விதை நேர்த்தி: ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையளவுக்கு 600 கிராம் அசோபாசை அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். நிலத்தில் இடுவதாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 2 கிலோ அசோபாசை 25 கிலோ மணல், 25 கிலோ தொழுஉரம் கலந்து தூவ வேண்டும்.

உரமிடுதல்: ஒரு ஹெக்டேர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழ வேண்டும். பின்னர் 20 கிலோ தழைச் சத்து, 20 கிலோ மணிச் சத்து ஆகியவற்றை விதைப்பின்போது அடியுரமாக இட வேண்டும்.

மேலுரமான 20 கிலோ தழைச்சத்தை விதைத்த 20-25 நாள்கள் கழித்து

கிடைக்கும் ஈரத்தை பயன்படுத்தி இட வேண்டும். களை நிர்வாகம்: விதைத்த 18 முதல் 20-ஆம் நாளில் களை எடுத்தல் அவசியம். பின்னர் 40-ஆம் நாளில் தேவைப்பட்டால் இன்னொரு முறையும் களை எடுக்கலாம். பயிர் களைதல்: விதைத்த 18 முதல் 20 -ஆம் நாளில் செடிகளைக் களைத்து தேவையான பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு தேவையில்லை: இந்தப் பயிரை பொதுவாக பூச்சிகள். நோய்கள் தாக்குவதில்லை. ஆதலால், பயிர் பாதுகாப்பு அவசியமில்லை. உயர் விளைச்சலைத் தரக்கூடிய ரகத்தை பயன்படுத்தும்போது நல்ல விளைச்சலைப் பெறலாம். அறுவடையும், விளைச்சலும்..: கதிர்கள் நன்கு காய்ந்து இலைகள் பழுத்தவுடன் அறுவடை செய்து களத்தில் காயவைத்து அடித்து தானியங்களை பிரித்து சுத்தம் செய்ய வேண்டும். தோராயமாக ஒரு ஹெக்டேருக்கு 1,850 கிலோ தானிய விளைச்சலையும், 5,500 கிலோ தட்டை விளைச்சலையும் பெறலாம். இவ்வாறு கிடைக்கும் தானியத்தை சாக்குப் பையில் போட்டு போத்து நீண்ட காலம் பாதுகாக்க முடியும். மதிப்பூட்டப்பட்ட பொருள்கள்: தினையில் இருந்து அவல், உப்புமா, தோசை, புட்டு, முறுக்கு, பக்கோடா உள்ளிட்ட சுவையான உணவையும் தயாரிக்க முடியும்.

**நவீன தொழில்நுட்பங்கள் மூலம் மானாவாரி நிலக்கடலையில் கூடுதல் விளைச்சல் பெறலாம்**



நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலையில் அதிக மகசூல் பெறலாம் என, நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது: தமிழகத்தின் மொத்தப் பரப்பில் சுமார் 50 சதவீதம் வானம் பார்த்த பூமியாகும். மானாவாரி நிலங்களில் குறைந்த மகசூலே கிடைக்கிறது. இதற்கு, பருவம் தவறிய மழை, மழை அளவில் நிலையில்லாத தன்மை, குறைந்த கால மழைப் பருவம், அதிக அளவு மண் அரிப்பு ஆகியவை முக்கிய காரணங்களாகும். சில நவீன யுக்திகளை கையாண்டு மானாவாரி சாகுபடியிலும் நல்ல மகசூல் பெறலாம். தமிழகத்தில் 52 விழுக்காடு மானாவாரி நிலமாகவும், இந்நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களில் 14 சதவீதம் எண்ணெய் வித்துக்களாகவும் உள்ளன. அதிலும் நிலக்கடலை சாகுபடி மிகவும் முக்கியமான மானாவாரி பயிராக விளங்குகிறது. சுமார் 80 சதவிகிதத்திற்கு மேல் நிலக்கடலை பயிரையே மானாவாரி நிலங்களில் பயிர் செய்கின்றனர். நம் நாட்டில் பெரும்பாலான சிறு, குறு விவசாயிகளின் நிலம் மானாவாரி நிலமாகவே உள்ளது. நிலக்கடலை உற்பத்தியில் நம் நாடு இரண்டாமிடத்தை பிடித்துள்ளது. இது தாவர எண்ணெய் உற்பத்தியில் முக்கிய இடம் பெறுவதோடு நல்ல

தரம் வாய்ந்த புரதம் மற்றும் தேவையான அளவு சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருளாக பயன்படுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நிலக்கடலைப் பயிரை மானாவாரியாக சாகுபடி செய்யும் போது கீழ்க்கண்ட உத்திகளைக் கையாள வேண்டும். ரகங்கள்: வி.ஆர்.ஐ. 2, 3, டி.எம்.வி. 7, 12, கோ-1, 2, ஜே.எல்-24 ஆகிய ரகங்கள் ஏற்றவையாகும்.

விதை அளவு: ஒரு ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ வரை நிலக்கடலைப் பருப்பு தேவைப்படும். நோய்களைத் தடுக்க விதை நேர்த்தி செய்தல்: மானாவாரி நிலக்கடலையில் பயிர் எண்ணிக்கை பராமரிக்காததே மகசூல் குறைவுக்கு முக்கிய காரணமாக உள்ளது. தண்டழுகல் நோய், வேர் அழுகல் நோய் ஆகியவை தாக்குவதால் பயிரின் வேர், தண்டு, அழுகி, கருகி பயிர் எண்ணிக்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க விதை நேர்த்தி செய்வது மிகவும் அவசியமாகிறது. பூசணக்கொல்லி விதை நேர்த்தி: ஒரு கிலோ விதையுடன் உரம் 4 கிராம் (அல்லது) கார்பன்டாசிம் 2 கிராம் இதில் ஏதேனும் ஒன்றை கலந்து வைத்து அடுத்த நாள் விதைக்கலாம். உயிரியல் மருந்து விதை நேர்த்தி:டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை செய்யும் பூஞ்சாணத்தை விதைப்பதற்கு முன் விதையுடன் கலந்து அடுத்த நாள் விதைக்கலாம்.

நுண்ணுயிர் விதைநேர்த்தி: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கான விதையுடன் 200 கிராம் ரைசோபியம் (ஒரு பொட்டலம்) மற்றும் 200 கிராம் பாஸ்போ பாக்டீரியா (ஒரு பொட்டலம்) ஆகியவற்றை ஒரு லிட்டர் ஆறிய வடிகஞ்சியில் கொட்டி நன்கு கலக்க வேண்டும். விதைகளை சாக்கு பையின் மேல் பரப்பவேண்டும்.

கஞ்சியுடன் கலந்த நுண்ணுயிர் கலவையை விதைகளின் மேல் ஒரு இலைக்கொத்து கொண்டு நன்கு தெளிக்கவேண்டும். சாக்குப் பையின் மீது உள்ள விதைகளை மேலும் கீழும் புரட்டி நுண்ணுயிர் நன்கு விதைகளின் மேல் படும்படி செய்யவேண்டும். 15 - 30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி 24 மணிநேரத்திற்குள் இதனை விதைக்கவேண்டும்.

அதாவது, முதலில் நோய்களிலிருந்து பாதுகாக்க பூஞ்சாண விதை

நேர்த்தி செய்துவிட்டு, அடுத்ததாக உயிர் உர விதை நேர்த்தி செய்து அதன்பின் 24 மணிநேரம் கழித்து விதைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

உரமிடுதல்: பெரும்பாலும், மானாவாரி நிலங்களில் உரமிடுதல் என்பது மிகவும் குறைவு என்றே சொல்லலாம். ஆனால், வேளாண் ஆராய்ச்சியில் மானாவாரியில் மகசூல் அதிகரிக்க உரமிடுதல் அவசியம் என்று தெளிவாகியுள்ளது. குறிப்பாக, நிலக்கடலையில் மேலுரமிடுவதைத் தவிர்த்துவிட்டு அடியுரமாகவே உரமிடல் வேண்டும். மானாவாரி நிலத்திற்கு ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல் சாலச் சிறந்ததாகும்.

விதைப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு ஒரு வண்டி (300 கிலோ) மட்கிய குப்பையுடன் 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் (அரை மூட்டை) 30 கிலோ பொட்டாஷ் (சுமார் அரை மூட்டை) ஆகியவற்றை நன்கு கலந்து, காற்றுப்புகாமல் களிமண் மூலம் மூடிவிட வேண்டும்.

விதைக்கும் போது இந்தக் குப்பை மற்றும் உரங்களுடன் யூரியா 9 கிலோவைச் சேர்த்து நன்கு கலக்கவேண்டும். இவற்றை கடலைப் பருப்பு சால் விடும் போது, அந்தப் படைக்காலில் தூவவேண்டும். டிராக்டர் மூலம் பருப்பு விதைத்தால், கடைசி உழவின்போது ஊட்டமேற்றிய தொழுவுரத்தை இட்டுவிடலாம். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க இயலாத நிலையில் நேரடியாக 25 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 30 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து விதைப்பின் போது இடலாம்.

ஜிப்சம் இடுதல்: நிலக்கடலை உற்பத்தியை அதிகரிக்க பயிருக்கு ஜிப்சம் இடுதல் மிகவும் அவசியம். ஜிப்சத்தில் 23 சதவீதம் சுண்ணாம்புச் சத்தும், 18 சதவீதம் கந்தகச் சத்தும் அடங்கியுள்ளது. இதில் சுண்ணாம்புச் சத்தானது காய்கள் திரட்சியாகவும், அதிக எடை உடையதாக உருவாகவும் வழி செய்கிறது. கந்தகச் சத்து நிலக்கடலையில் எண்ணெய்ச் சத்தை அதிகரிக்கிறது. ÷ஒரு ஏக்கருக்கு 80 கிலோ (2 மூட்டை) ஜிப்சத்தை அடியுரமாகவே இடவேண்டும். அதன்பின்பு விதைத்த 40-45-

ஆம் நாளில் பூப்பிடிக்கும் தருணத்தில் மீண்டும் ஒருமுறை ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை இட்டு மண் அணைக்க வேண்டும். இவ்வாறு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலையில் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளார். "மானாவாரி நிலங்களில் உரமிடுதல் என்பது மிகவும் குறைவு என்றே சொல்லலாம். ஆனால், வேளாண் ஆராய்ச்சியில் மானாவாரியில் மகசூல் அதிகரிக்க உரமிடுதல் அவசியம் என்று தெளிவாகியுள்ளது. குறிப்பாக, நிலக்கடலையில் மேலுரமிடுவதைத் தவிர்த்துவிட்டு அடியுரமாகவே உரமிடல் வேண்டும். மானாவாரி நிலத்திற்கு ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல் சாலச் சிறந்ததாகும்."

**மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் திட்டம் தொடக்கம்**

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் கோட்டம், சிட்லபாக்கம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கும் திட்டத்தை அமைச்சர் டி.கே.எம். சின்னையா புதன்கிழமை தொடக்கி வைத்தார். கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு ஆட்சியர் வி.கே. சண்முகம் தலைமை வகித்தார். திட்டத்தைத் தொடக்கி வைத்து அமைச்சர் டி.கே.எம். சின்னையா பேசியதாவது: வறட்சியால் பாதிக்கப்படும் மாவட்டங்களில் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், உலர் தீவனம் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2014-15-ஆம் நிதியாண்டில் 1,44,814 கிலோ வைக்கோல் ரூ.10 லட்சத்துக்குக் கொள்முதல் செய்யப்பட்டு, 545 பயனாளிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 7 ஆயிரம் கால்நடைகளுக்கு உலர் தீவனம் கிடைக்கப்பெற்றது. கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகளுக்கு

குறைந்த பட்சம் 5 மாடுகளுக்கு ஒரு வாரத்துக்கான தீவனமாக 105 கிலோ வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் புகைப்படத்துடன் கூடிய உலர் தீவன விநியோக அட்டை வழங்கப்பட்டு, மானிய விலையில் ஒரு கிலோ வைக்கோல் ரூ.2-க்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2015-16-ஆம் நிதியாண்டுக்கு இத்திட்டத்தில் கிடங்கு ஒன்றுக்கு வைக்கோல் கொள்முதல் செய்வதற்காக ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அய்யன்பேட்டை, புக்கத்துறை, சிட்லபாக்கம் ஆகிய கால்நடை மருத்துவமனை வளாகங்களில் செயல்படுத்தப்பட உள்ளது என்றார் அவர். நிகழ்ச்சியில், தாம்பரம் வருவாய்க் கோட்டாட்சியர் டாக்டர் பரிதா பானு, மாவட்ட ஊராட்சித் தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் என்.சி.கிருஷ்ணன், தாம்பரம் நகர் மன்றத் தலைவர் கரிகாலன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் வி.பன்னீர்செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தென்மேற்கு பருவமழை: முன்னெச்சரிக்கை ஆலோசனைக் கூட்டம்**

தென்மேற்கு பருவமழை பாதிப்புகள் குறித்து மதுரையில்அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். தென்மேற்கு பருவமழை தொடங்குவதை முன்னிட்டு மழையால் ஏற்படும் சேதங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு புதன்கிழமை சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தலைமை வகித்த இந்தக் கூட்டத்தில் வருவாய்த்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, தேசிய நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத்துறை மற்றும் பிறதுறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதில் கண்மாய்களை சிறந்த முறையில்

பாதுகாத்தல், வெள்ளத்தால் பாதிக்கப்படுவோருக்கு முகாம் அமைத்தல், கண்மாய்களை சீர்செய்தல், வெள்ளக்காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்தல், மருத்துவ வசதி செய்தல், மின் விநியோகம் உடனுக்குடன் சரிபார்த்தல், அத்தியாவசியப் பொருள்களைத் தடையின்றி வழங்குதல் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டன. இயற்கை இடர்ப்பாடுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

**உத்தமபாளையம் அருகே சூறாவளியுடன் பலத்த மழை**

உத்தமபாளையம் அருகே புதன்கிழமை மாலை சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழையால் வாழை, தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டி, கோகிலாபுரம், ஆனைமலையன்பட்டி, ராமசாமி நாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் புதன்கிழமை மாலை சூறாவளிகாற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் ஆனைமலையன்பட்டி கிராமத்தில் 10-க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன, தெருக்களில் இருந்த 7 மின் கம்பங்கள் முறிந்து விழுந்தன. மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்ந்ததில் வீடுகள், அரசு மற்றும் பள்ளிக் கட்டடங்கள் சேதமடைந்தன. இதே பகுதியில் உள்ள ஒரு தனியார் கிட்டங்கியின் சுற்றுச் சுவர் இடிந்து விழுந்தது. இக்கிராமத்தை சேர்ந்த சுந்தாயம்மாள், மொக்கராஜ், கோட்டைச்சாமி, நல்லுகாமு, ரவி உள்ளிட்ட 30 பேரின் வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன. மேலும், இப்பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களில் இருந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான வாழை மரங்கள் நாசமாயின.

மின் கம்பங்கள் சாய்ந்ததால் இரவு முழுவதும் மின் விநியோகம் இல்லாமல் கிராமங்கள் இருளில் மூழ்கின. இதுபற்றி தகவல் அறிந்ததும், அங்கு சென்ற உத்தமபாளையம் வட்டாட்சியர் சேகர் தலைமையில் வருவாய்த் துறையினர் மற்றும் ஆனைமலையன்பட்டி ஊராட்சித் தலைவர் ரவி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பாதிப்புகள் குறித்து கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**போடியில் பலத்த மழை:வெப்பம் தணிந்தது**

போடியில் புதன்கிழமை பெய்த பலத்த மழையால் வெப்பம் தணிந்தது.

போடி பகுதியில் புதன்கிழமை பிற்பகலில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர், மாலையில் இடி மின்னலுடம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையினால் வெப்பம் தணிந்து குளிர்ந்த சூழல் நிலவியது.

**பூக்கள் விலை உயர்வு**

திருமண முகூர்த்தம், கோயில் திருவிழா ஆகியவை காரணமாக வெள்ளக்கோவிலில் பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த வாரத்தை விட சுமார் 50 சதவீதம் பூக்களின் விலை உயர்ந்துள்ளது. மதுரை, கோவை, ஈரோட்டிலிருந்து பூக்கள் மொத்தமாக வாங்கி இங்கு விற்பனை செய்யப்படுகிறது. பூக்களின் விலை (கிலோவில்): மல்லி ரூ.200, முல்லை ரூ.250, ரோஜா ரூ.150, பட்டன் ரோஜா ரூ.300, கனகாம்பரம் ரூ.350, செவ்வந்தி ரூ.150,அரளி ரூ.180, துளசி ரூ.80.

**உழவர் சந்தையில் ரூ.1 கோடிக்கு காய்கறி விற்பனை**

தாராபுரம் உழவர் சந்தையில் ரூ.1 கோடிக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து உழவர் சந்தை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இந்தச் சந்தைக்கு குண்டடம், மூலனூர், தாராபுரம் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த மே மாதத்தில் 3,717 விவசாயிகள் 4 லட்சம் கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதன் மதிப்பு ரூ.1.2 கோடி என்றார்.

**ஈரோட்டில் சாகுபடி பணி தீவிரம்**

கோடைக் காலத்தில் பரவலாக மழை பெய்துள்ளதால் ஈரோடு மாவட்டத்தில் வேளாண் சாகுபடிப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் ஏப்ரல், மே மாதங்களில் கோடை மழை பரவலாக பெய்துள்ளது. மே மாதத்தில் கிட்டத்தட்ட 15 நாள்கள் வரையிலும் பரவலாக மழை பெய்தது. எதிர்பாராமல் பெய்த மழையால் உற்சாகமடைந்த மானாவாரி விவசாயிகள் உடனடியாக கோடை உழவு மேற்கொண்டு நிலத்தை பண்படுத்தியதுடன், விவசாயப் பணிகளில் சுறுசுறுப்பு காட்டத் தொடங்கினர். நிலக்கடலை, சோளம், மக்காச்சோளம், ஆமணக்கு, எள் போன்ற மானாவாரி பயிர்களின் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளாக கோடை சீசனில் மழைப்பொழிவு இல்லாததால் மானாவாரி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. தற்போது பெய்துள்ள மழையால் புளியம்பட்டி, நம்பியூர், குருமந்தூர், அளுக்குளி, கவுந்தப்பாடி, தயிர்பாளையம், நசியனூர், அறச்சலூர், மொடக்குறிச்சி, கள்ளிப்பட்டி, பங்களாபுதூர், லக்காபுரம், எழுமாத்தூர், அவல்பூந்துறை போன்ற

பல்வேறு பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் மானாவாரி பயிர் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. பொதுவாகவே மானாவாரி பயிர்கள் 3 முதல் 4 மாதங்களில் விளைந்து பலன் கொடுக்கும் என்பதாலும், குறைந்த செலவே ஆகும் என்பதாலும் மானாவாரியில் இதுவரை தரிசாக போட்டிருந்த விவசாயிகள் கூட தற்போது வேளாண் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளதால் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பு குறைந்திருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு தினமும் வேலை கிடைத்துள்ளதால் உற்சாகமடைந்துள்ளனர்.

**குன்னூரில் பரவலாக மழை**

குன்னூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. குன்னூரில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய பருவ மழை பொய்த்துப் போனதால், கேரட், பீட்ரூட், உள்ளிட்ட மலைக் காய்கறிகளை பயிரிட்ட விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இந்நிலையில், புதன்கிழமை அதிகாலை முதல் குன்னூரில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும், குன்னூரின் முக்கிய நீராதாரமான ரேலியா அணையின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளதால் குடிநீர் பிரச்னை வர வாய்ப்பில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**3 மையங்களில் உலர் தீவன விற்பனை தொடக்கம்**

திருவண்ணாமலை, போளூர், புதுப்பாளையம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3 மையங்களில் கால்நடைகளுக்கான உலர் தீவன விற்பனையை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் புதன்கிழமை தொடக்கி வைத்தார்.

கால்நடைகளுக்கான தீவனப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, பால் உற்பத்தியை அதிகரிக்க கால்நடைத் துறை மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை, போளூர், புதுப்பாளையம் ஆகிய 3 இடங்களில் உலர் தீவன (வைக்கோல்) விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் உலர் தீவன விற்பனை புதன்கிழமை தொடங்கப்பட்டது. திருவண்ணாமலையில் நடைபெற்ற விழாவுக்கு, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் எஸ்.கந்தசாமி தலைமை வகித்தார். துணை இயக்குநர் டி.தட்சிணாமூர்த்தி, உதவி இயக்குநர்கள் ப.செல்லன், க.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் பங்கேற்று உலர் தீவன விற்பனையைத் தொடக்கி வைத்துப் பேசினார். ஒரு மையத்துக்கு ரூ.4 லட்சத்து 80 ஆயிரம் வீதம் 3 மையங்களுக்கு ரூ.14 லட்சத்து 70 ஆயிரம் உலர் தீவனம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து விவசாயிகளுக்கு ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 வீதம் மானிய விலையில் விற்பனை செய்யப்படும். கால்நடை வளர்ப்போர் மானிய விலையில் உலர் தீவனம் பெற முன் பதிவு செய்து கொள்ளலாம். கால்நடை வளர்ப்போருக்கு ஒரு மாட்டுக்கு 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு 21 கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 5 கால்நடைகளுக்கு உலர் தீவனம் வழங்கப்படும். கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் ஆட்சியர் அ.ஞானசேகரன்.

விழாவில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு, நகர்மன்றத் தலைவர் என்.பாலசந்தர், மாவட்ட கோ-கோ சங்கத் தலைவர் ஏ.கே.குமாரசாமி, கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை

பராமரிப்புத் துறை பணியாளர்கள், பொதுமக்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண் கருவிகளை மானிய விலையில் பெற விண்ணப்பிக்கலாம்**

குறு, சிறு மற்றும் மகளிர் விவசாயிகள் மானிய விலையில் வேளாண் கருவிகளைப் பெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் கே.எஸ். பழனிச்சாமி தெரிவித்துள்ளார். வேளாண் தேவைக்கான பண்ணை இயந்திர சக்தியை அதிகரிக்கவும், குறைவான உற்பத்தி செலவில் அதிக மகசூல் பெறவும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது.

வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில், ஆதிதிராவிடர், பழங்குடியினர், குறு, சிறு மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும், பிற விவசாயிகளுக்கு 40 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள வேளாண் கருவிகளின் பயன்பாடு அனைவருக்கும் கிடைக்கும் வகையில், வேளாண் கருவிகளை நியாயமான வாடகையில் வழங்கும் வகையில், வாடகைத் திட்ட மையம் செயல்படவுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 25 லட்சம். விவசாயக் குழுவினர் அல்லது தனிப்பட்ட விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் 40 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

காய்கனிகள், பழங்கள், வாசனைப் பொருள்கள் மற்றும் மூலிகைப் பொருள்களின் சேதத்தைத் தவிர்க்கும் வகையில் சூரிய சக்தி சோலார் உலர்த்திகள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உலர்த்தியை 400 சதுர அடி பரப்பில், ரூ. 3.97 லட்சம் உத்தேச மதிப்பில் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படும். விருப்பமுள்ள விவசாயக் குழுவினர், விவசாயிகள் தொடர்புடைய பகுதிகளில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை அணுகுமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் காப்பீடுத் திட்டம்: புதுகை மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.118 கோடி இழப்பீடு**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 2013-14 ஆம் ஆண்டில் நெல் பயிருக்கு காப்பீடு செய்த விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு நிறுவனத்தால் விடுவிக்கப்பட்ட ரூ. 118 கோடி இழப்பீடுத் தொகை விரைவில் விவசாயிகளுக்கு அளிக்கப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த (2013-14) ஆண்டில் சுமார் 74,262 ஹெக்டேரில் நெல் பயிர் சாகுபடி செய்த விவசாயிகள் 78,320 பேர் வேளாண் காப்பீடு செய்தனர். இதன்மூலம் ரூ. 3.11 கோடி பிரிமியத் தொகை காப்பீடு நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்டது. அந்த ஆண்டில் பருவமழை ஏமாற்றியதுடன் மின்சாரமும் கைகொடுக்காத காரணத்தால் காவிரி டெல்டா பகுதி உள்பட மாவட்டம் முழுவதும் சாகுபடி முடங்கியது. இதன்காரணமாக, கடுமையான இழப்பைச் சந்தித்த விவசாயிகள் வேளாண் காப்பீடு நிறுவனம் மூலம் உரிய இழப்பீடுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட நிர்வாகத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இதுகுறித்து மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் கே.வி.எஸ். குமார் கூறியது: புதுக்கோட்டை மாவட்டத்தில் 2013-14 -ல் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வேளாண் காப்பீடு நிறுவனம் ஒதுக்கியுள்ள ரூ. 118 கோடி இழப்பீடுத் தொகை கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தத் தொகை ஓரிரு நாள்களில் அறிவிக்கப்பட்டுள்ள பிர்காக்களைச் சார்ந்த விவசாயிகள் பிரிமியம் செலுத்திய வேளாண் கடன் சங்கங்களுக்கு பிரித்து வழங்கப்படும் என்றார்.

**அரைவைக்காக 1000 டன் நெல் திருச்சிக்கு அனுப்பிவைப்பு**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்திலிருந்து ஆயிரம் டன் சன்ன ரக நெல் அரைவைக்காக திருச்சிக்கு புதன்கிழமை ரயிலில் அனுப்பிவைக்கப்பட்டது.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் மூவாநல்லூர், அசேஷம் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து 75 லாரிகளில் ஆயிரம் டன் நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு புதன்கிழமை கொண்டுவரப்பட்டது. பின்னர் சரக்கு ரயில் மூலம் நெல் மூட்டைகள் திருச்சிக்கு அரைவைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

**"உரக் கட்டுப்பாடு சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை'**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உரக் கட்டுப்பாடு சட்டத்தை மீறி உரம் விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தரமான உரங்கள் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதற்காக உரக்கட்டுப்பாடு சட்டம் 1985இல் கொண்டுவரப்பட்டது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் கடைகள் வழியாக உரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

விவசாயிகளுக்கு தரமான உரங்கள் வழங்குதலை உறுதி செய்யவும், அதிகபட்ச விலைக்கு மிகாமல் விற்பனை செய்வதை உறுதி செய்யவும் தரக்கட்டுப்பாடு பிரிவு மாவட்ட அளவில் செயல்பட்டுவருகிறது. மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

உரவிற்பனையாளர்கள் உரிமம் பெற்று விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு மட்டுமே உரம் விற்பனை செய்தல் வேண்டும். ஒவ்வொரு விற்பனைக்கும் ரசீது கொடுக்க வேண்டும். ரசீதுகளில்

விற்பனை நிலையத்தின் பெயர், ஊர், உரஉரிமத்தின் எண், ரசீது எண் முதலியன அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். விற்பனை புத்தகம் உரிய படிவத்தில் பராமரிக்கப்பட வேண்டும். மேலும், உரம் விற்பனை செய்யப்படும் நாள், விவசாயியின் பெயர் மற்றும் முகவரி இன்றி விற்பனை செய்தல் கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். விவசாயிகளின் கையொப்பம் பெறவேண்டும். கடனுக்கு ரசீது போடாமல் உரங்கள் வழங்குதல் உரக்கட்டுப்பாடு சட்டத்தின்படி குற்றமாகும்.

ஒவ்வொரு உரவிற்பனை நிலையத்திலும் விற்பனை செய்யப்படும் அனைத்து உரங்களின் இருப்பு, அவற்றின் விற்பனை விலை ஆகியவற்றை தவறாது நாள்தோறும் தெளிவாக எழுதி விவசாயிகள் பார்வையில்படும்படி கடை முன் வைத்தல் வேண்டும்.

உரத்தின் விலை மூட்டையில் அச்சடிக்கப்பட்டிருக்கும் அதிகபட்ச விலைக்கு மிகாமல் இருப்பதை விவசாயிகள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

விவசாயிகள் உரம் தொடர்பான புகார்களுக்கு வேளாண் இணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண் 04652 275391 மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக இலவச அழைப்பு எண் 1077-ஐ தொடர்பு கொள்ளலாம் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரப்பர் விலையில் சிறிது ஏற்றம்**

குமரி மாவட்டத்தில் ரப்பர் விலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டு கிலோ ரூ. 115 ஆக உயர்ந்துள்ளது.

ரப்பர் விலை வரலாறு காணாத வகையில் வீழ்ச்சியடைந்துள்ளதால் இம்மாவட்ட ரப்பர் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதம் கிலோ ரூ.100-க்கும் குறைவாக இருந்தது.

இந்நிலையில் கடந்த மாதம் இறுதிமுதல் விலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டு புதன்கிழமை கிலோ ரூ. 115.50 ஆக உயர்ந்திருந்தது. இந்த விலை உயர்வால் ரப்பர் விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து குலசேகரத்தில் முன்னோடி ரப்பர் வணிகர் கூறுகையில், சர்வதேச சந்தையில் ரப்பரின் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்திய ரப்பர் சந்தையிலும் விலை சிறிதளவு உயர்ந்துள்ளது. எனினும் இந்த விலை உயர்வு நிரந்தரமாக நீடிக்கும் என்று உறுதியாக கூறமுடியாது. ஆலைகளுக்கு ரப்பரை விற்பனை செய்துள்ள பெரும் வணிகர்கள், கொள்முதலில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக விலையை உயர்த்தி கொள்முதல் செய்கின்றனர். எனவேதான் விலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது. அண்மையில் கேரள மாநில அரசு ரப்பர் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில் கிலோவுக்கு ரூ. 30 மானியம் அளிப்பதாக அறிவித்தது. ஆனால் அத்திட்டம் இதுவரை செயல்பாட்டுக்கு வரவில்லை என்றார்.

**வீட்டுத் தோட்ட பராமரிப்புப் பயிற்சி**

கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் இயங்கி வரும் பாளையங்கோட்டை வேளாண் உதவி மையத்தில் வீட்டுத் தோட்டம் பராமரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

வேளாண் உதவி மைய உதவி பேராசிரியர் சி. ராஜாபாபு வரவேற்றார். வீட்டுத் தோட்டத்தின் அவசியம் என்ற தலைப்பில் தோட்டக்கலைத் துறை பேராசிரியர் விஜிலியன் ஹாரிஸ் பேசினார். காய்கனி சாகுபடியில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள், கத்தரி, வெண்டை, மிளகாய், தக்காளி, கீரை வகைகள், மா, கொய்யா, பலா போன்ற பழ வகைகள், மல்லி பிச்சி, முல்லை, ரோஜா, கனகாமரம் போன்ற பூ செடிகளில் உள்ள நுண்ணூட்ட சத்துக் குறைவுக்கான அறிகுறிகள், கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து

பயிற்சியில் பங்கேற்றோருக்கு விளக்கப்பட்டது. செயல்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**புதுவையில் மாம்பழ, பலாப் பழ மேளா தொடக்கம்**

புதுச்சேரி பாப்ஸ்கோ சார்பில் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள அங்காடியில் மாம்பழம் மற்றும் பலாப்பழ மேளா புதன்கிழமை தொடங்கியது.

அங்குள்ள பாப்ஸ்கோ அங்காடியில் பலவித ரக மாம்பழங்கள், பலாப்பழம் குறைந்த விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கு சீசன் முடியும் வரை மாம்பழம், பலாப்பழம் விற்பனைக்காக வைக்கப்படவுள்ளது.

பங்கனபள்ளி, ருமேனி, ஒட்டு, மல்கோவா, கல்நீலம், ரசபூரி, ரசால், ரெட்டிக்கோலா, மனோரஞ்சிதம், காலப்பாடி ஆகிய ரக மாம்பழங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. நெய்வேலி, பண்ருட்டி ஆகிய பகுதிகளில் பலாப்பழங்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

பாப்ஸ்கோ மேலாண் இயக்குநர் கணேசன் மேளாவைத் துவக்கி வைத்தார்.

இந்த ஆண்டு பருவம் முடியும் வரை அனைத்து வகையான ரகங்களிலும் மாம்பழங்கள் பொதுமக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினமும் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை விற்பனை நடைபெறுகிறது.

**காய்கறிகளின் அரசன் கத்தரி**

இந்திய விவசாயத்தில் தொன்றுதொட்டே நறுமணப் பொருள்கள் (SPICES) ஏற்றுமதிச் சிறப்புள்ளவை. மிளகு நறுமணப் பொருள்களின் அரசன் என்றும், ஏலக்காய் நறுமணப் பொருள்களின் அரசி என்றும் குறிப்பிடுவார்கள்.

நறுமணப் பொருள்கள் பணக்காரப் பயிர்கள். அவற்றை சாகுபடி செய்ய மலைப் பகுதிகளில் தோட்டங்கள் வாங்க வேண்டும். காய்கறிகளில்

மகுடம் தரிக்கும் கத்தரிக்காய் ஏழை விவசாயிகளின் பயிர். மிளகும், ஏலக்காயும் கத்தரிக்காய் சமையலுக்கு வாசனை தரலாம். சோற்றோடு கலந்து உண்ணப்படும் உணவாகிவிடாது! 1950-களிலிருந்து எனக்கும், கத்தரிக்காய்க்கும் உள்ள தொடர்பை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. அப்போது நான் பள்ளிச் சிறுவன். மயிலை நாச்சியப்பத் தெருவில் வாசம். கணுக்கால் முழுவதும் அழுகுணிச் சிரங்கு படைபடையாக அப்பியிருந்தது.

எனது தாயார் கச்சேரி சாலையில் உள்ள வெங்கடரமணா ஆயுர்வேத மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காண்பித்தபோது கஷாயம், சூர்ணம் வழங்கியதுடன் பத்திய உணவைக் குறிப்பிட்டு பிஞ்சுக் கத்தரி, அவரை, புடல் தவிர வேறு காய்கறி சேர்க்க வேண்டாம் என்றதுடன், கடல் அலை புண்ணில் அலம்பும் வண்ணம் கடற்கரையில் சிறிது நேரம் நிற்கச் சொன்னார். வைத்தியர் சொன்ன காய்கறிகளை வாங்க என் தாயார் ராயப்பேட்டை சாலையில் உள்ள தண்ணித் துறை காய்கறி அங்காடிக்குச் சென்று அவரை, புடல், கத்தரி வாங்கி வருவார்கள். அப்போதுதான் பொடிப் பொடியான கரு நீலக் கத்தரிக்காயைப் பார்த்தேன். கேட்டபோது இது ரசக் கத்தரிக்காய் என்றார். மேற்படி வைத்தியத்தால் குணமடைந்து பள்ளிக்குச் சென்ற கதை இருக்கட்டும்.

அதேசமயம் நல்ல ருசியுள்ள, ஒரு கொட்டைப் பாக்கு அளவுள்ள அந்தப் பொடிக் கத்தரிக்காய் இன்று காணாமல் போய்விட்டது. பின்னர் பெரியவனாகி மைய விவசாய அமைச்சரகப் பிரிவான அங்காடிப் புலனாய்வுத் துறையில் பணிபுரிந்தபோது, நான் சுவைத்த பீம விலாஸ் கத்தரிக்காய் கொஸ்துவை மறக்க முடியாது.

அதே மயிலையில் கச்சேரி சாலை, அருண்டேல் தெருமுனையில் காலை 9 மணி வரை இட்லி - கத்தரிக்காய் கொஸ்து காம்பினேஷன் கிட்டும். உட்கார இடம் கிடைக்காது. பார்சலுக்கு பாத்திரம் வேண்டும்.

அப்போதெல்லாம் பாலிதீன் காகிதத்தில் பார்சல் தர மாட்டார்கள்! தம்புச் செட்டித் தெரு, தாசப்பிரகாஷ் ஹோட்டலில் "வாங்கிபாத்' (கத்தரிக்காய்

சாதம்) பிரசித்தம். அதற்கென்றே வருபவர்கள் உண்டு. ஏன் இவ்வளவு பீடிகை? கத்தரிக்காயை எல்லாவிதமாகவும் சமைக்கலாம். பொறியல், சாம்பார், காரக் குழம்பு, கூட்டு, மோர்க் குழம்பு, அவியல், கதம்ப சாம்பார், சுட்டு அரைத்த துவையல், ரச வாங்கி ரசம் என்று எப்படி வேண்டுமானாலும் சமைத்து உண்ணப் பயன்படும் கத்தரியைக் காய்கறிகளின் அரசன் என்பது மிகை அல்ல. எனது பணி வேளாண் விளைபொருள் அங்காடிப் புலனாய்வு என்பதால், தமிழ்நாடு முழுவதும் சுற்ற வேண்டும். அது எனது கத்தரிக்காய் ஆராய்ச்சிக்கு உதவியது. மாவட்டத்துக்கு மாவட்டம் கத்தரிக்காய்களின் மாறுபட்ட தோற்றம், ருசி வியப்பூட்டியது. வேலூரில் ஒரு ரகம், விழுப்புரத்தில் ஒரு ரகம், கடலூரில் ஒரு ரகம், திருச்சியில் பல ரகம், புதுக்கோட்டையில் ஒரு ரகம், கும்பகோணத்தில் ஒரு ரகம். திண்டுக்கல் - மதுரையில் ஒரு ரகம், காரியாபட்டியில் ஒரு ரகம், நெல்லையில் ஒரு ரகம், குமரியில் ஒரு ரகம், சேலம் - கோவையில் சில ரகங்கள். நிறத்திலும் உருவத்திலும் நிறைய வேற்றுமை. குண்டுக் கத்தரிக்காய்களில் சிறிது, பெரிது, நடுத்தரம். நீட்டக் கத்தரிக்காய்களில் விரல் கத்தரிக்காய் தனி. நிறங்களில் பச்சை, ஊதா, கருநீலம், வெள்ளை, ஊதாவில் வெள்ளை, பச்சையில் வெள்ளை, தமிழ்நாட்டில் விளையும் கத்தரிக்காய்களில் மிகுந்த ருசியுள்ள ரகம் எது என்று வினவப்பட்டால் என்னுடைய ஓட்டு வேலூர் முள் கத்தரிக்காய்க்குத்தான். அதன் பச்சை கிரீடத்தில் (காம்பு) முள்கள் உண்டு.

முள்கள் உள்ள பலாப்பழம் போல் முள்கள் நிறைந்த வேலூர் கத்தரிக்காய் காரலோ கசப்போ இல்லாதது. அதிக ருசியுள்ளது. வேலூரில் உள்ள ஒருவர் என்னிடம் திண்டுக்கல் பச்சைக் கத்தரிக்காய் விதைகளைப் பெற்றுக் கொண்டு அதன் சுவையை விரும்பினார். நானோ வேலூரிலிருந்து முள் கத்தரி விதைகளைப் பெற்று என் வீட்டுத் தோட்டத்தையும் மாடித் தோட்டத்தையும் அலங்கரித்துள்ளேன்.

தமிழ்நாடு, அதுபோல் ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற திராவிட மாநிலங்கள் நீங்கலாக பிற மாநிலங்களிலும் சரி, பிரதேசங்களிலும் சரி, விளைவிக்கப்படுபவை சுரை அளவு பெரிதாயுள்ள நீர்க் கத்தரிக்காய்தான். எவ்வாறு "சாம்பார் வெங்காயம்' என்று கூறப்படும் சின்ன வெங்காயம் தமிழ்நாட்டின் கொடையோ அவ்வாறே சின்னக் கத்தரிக்காய்களும் தமிழ்நாட்டின் கொடை. நான் உலகம் சுற்றியதில்லை. இந்தியாவை ஓரளவு சுற்றியுள்ளேன். 15 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா செல்லும் வாய்ப்பு வந்தது. அப்போது சிகாகோ நகரில் உள்ள இந்தியன் ஸ்டோர் சென்று காய்கறி வாங்கும்போது, காணாமல் போன நீல நிற நச்சுப் பொடிக் கத்தரிக்காய்களைக் கண்ணுற்றேன். "கண்டேன் சீதையை' என்று அனுமார் குதித்தது போல் உற்சாகமுற்று, இவை எங்கிருந்து வருகின்றன என்று கடை நடத்தும் சேட்டை ஹிந்தியில் கேட்டேன். "மத்ராஸ் ப்ஸ' என்றார். சென்னை - ஆந்திரம் எல்லையில் பயிராகும் இந்தச் சிறப்பு ரகக் கத்தரிக்காய் சென்னை அங்காடிக்கு வராமல், சிகாகோவுக்குப் போகிறது! சிகாகோ மட்டுமல்ல; அநேகமாக அமெரிக்க மாநிலங்களில் பல நகரங்களில் உள்ள "இந்தியன் அங்காடிகளிலும்' இந்த சின்னக் கத்தரிக்காய் கிட்டும் என்று தோன்றுகிறது. சின்ன வயதில் எனது சின்னக் காலில் படையாக வந்த சிரங்கைக் குணப்படுத்திய சின்னக் கத்தரிக்காயை நான் எப்படி மறப்பேன்? கத்தரிக்காயில் நிறைய இரும்புச் சத்துடன் வேறு அரிய உலோகச் சத்துகளும் உண்டு. ஆயுர்வேத வைத்தியர்கள் விதை பெரிதான முற்றிய கத்தரிக்காய்களை பத்திய உணவுக்கு அனுமதிக்க மாட்டார்கள். கத்தரிக்காய் பிஞ்சாக இருந்தால் சாப்பிட வேண்டும். மூன்று தோஷங்களான பித்தம், வாயு, கபம் ஆகியவற்றைக் கண்டிக்கும் திறன் பிஞ்சுக் கத்தரிக்காய்களுக்கு உண்டு. பொதுவாக கத்தரிக்காய் நல்ல மலமிளக்கி, வயிற்று நோய்க்கு நன்று. குறிப்பாக வாத தோஷம்

அடங்கும். பிஞ்சுக் கத்தரிக்காய் மருந்து. முற்றிய கத்தரிக்காய் மருந்து அல்ல.

கத்தரிக்காயின் தோற்ற வரலாறு என்ன? வேதியர்களின் சிரார்த்த சமையலில் கத்தரிக்காய்க்குத் தடை என்பதாலும், சங்க நூல்களிலும், வேத நூல்களிலும் கத்தரிக்காய் பற்றிய குறிப்பு இல்லாததாலும் கத்தரிக்காயை அன்னியப் பயிராகக் கருதுகிறார்கள்.

ஆனால், கத்தரிக்காய் குடும்பத்தைச் சேர்ந்த சுண்டையைப் பற்றிய குறிப்பு உள்ளது. எவ்வாறு முரட்டுப் புல் ரகத்திலிருந்து விதைத் தேர்வு அடிப்படையில் நெல் உருவானதோ அதுபோல் சுண்டையிலிருந்து விதைத் தேர்வு அடிப்படையில் சின்னக் கத்தரிக்காய் தோன்ற வாய்ப்பு உள்ளது!

இதன் சமையல் பயன் பிற்கால மரபாயிருக்கலாம் அல்லவா? பயோ டைவர்சிட்டி, பல்லுயிர்ப் பெருக்கம் என்ற கண்ணோடத்தில் தமிழ்நாடு விவசாயிகள் உருவாக்கிய ஏராளமான சிறு கத்தரிக்காய் ரகங்களுக்கு ஆபத்து நெருங்கி விட்டது. மகைக்கோ - மான்சன்டோ விதைக் கம்பெனி உருவாக்கியுள்ள ஹைபிரீட் / வீரிய ஒட்டு கலர் கத்திரிக்காய் இன்று படுபோடு போடுகிறது. ருசி அவ்வளவு மோசமில்லை. நல்ல மகசூல் என்பதால் லாப நோக்கில் அங்காடி வரத்தில் சுமார் 40 சதவீதம் மான்சன்டோ - மகைக்கோ கத்தரி உள்ளது. இதனால், பல நாட்டு ரகக் கத்தரிக்காய்கள் அருகிவிட்டன என்பது கசப்பான உண்மை. கத்தரிக்காயை இத்தோடு விடாமல் அமெரிக்க போதனையால் போதையில் இயங்கும் சில தமிழ்நாடு வேளாண் விஞ்ஞானிகள், மரபணு உத்திகொண்டு பி.ட்டி. கத்தரிக்காய்களை அறிமுகம் செய்து நாட்டு ரகக் கத்தரிக்காய்களுக்குக் கானல் வரி எழுதுவது எவ்வளவு மடமை? நம்மிடமுள்ள நாட்டு ரகங்களைக் கொண்டே சரியான சாகுபடி உத்திகளைக் கொண்டு மகசூலை உயர்த்த வழி உள்ளபோது, மரபணு விஷம் வேண்டாமே. கத்தரிக்காய் புராணத்தில் இறுதியாக சொற்பொருள் பற்றிய மொழி ஆராய்ச்சியும் உள்ளது. தெலுங்கு,

கன்னடம், மலையாளம், மராட்டியம், சிந்தி மொழிகளில் "வாங்கி, வாங்கே' என்றும், ஹிந்தியில் "பைகன்' என்றும் வழங்கப்படும் இக்காய் தமிழில் மட்டுமே கத்திரி, கத்தாரி, கத்தரி என்று பேசப்படுகிறது. சம்ஸ்கிருதத்தில் "கிரீட பலம்'. கிரீட பலம் என்றால் மகுடமுள்ள காய். அதாவது, "காய்கறி அரசன்'. கத்திரி என்ற திரிபுச் சொல் பஞ்சாபியில் "க்ஷத்திரீய' என்று பொருள் தரும். தமிழில் கத்தரி ஒரு க்ஷத்திரியக் காய் என்பதால், வடமொழியில் கிரீடம் சூடியுள்ளது. ஆகா, என்ன பொருத்தம், இந்தப் பொருத்தம்! கத்தரிக்காய் செடியில் உள்ளபோது அதன் காம்பு மகுடம் போல் காட்சியளிக்கும். தமிழில் "பாவாடை' என்பர். தலைகீழாகப் பார்த்தால் பாவாடை அணிந்த பெண்ணுருவம் கிட்டும். தமிழில் ராணி என்றால் சம்ஸ்கிருதத்தில் ராஜா. காய்கறிகளின் அரசன் மட்டுமல்ல; அரசியும் கூட.

காலங்களில் அவள் வசந்தம்
கலைகளிலே அவள் ஓவியம்
மாதங்களில் அவள் மார்கழி
மலர்களிலே அவள் மல்லிகை
கனிகளிலே அவள் மாங்கனி....

என்று சிந்து பாடிய கண்ணதாசன், "காய்களிலே அவள் கத்தரி' என்று தொடர்ந்திருக்கலாம். ஆண் பாலைப் பெண் பாலாக்க வேண்டாம் என்று வடமொழி பயின்ற கண்ணதாசன் எண்ணியிருக்கலாம். சரி, போகட்டும். காய்கறி ராஜாக்களை சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகள் நல்வாழ்வு பெற, நாட்டுக் கத்தரிக்காய்களுக்குக் கானல் வரி எழுதும் மரபணு மாற்ற விஞ்ஞானிகளை மனமாற்றம் செய்ய, கத்தரிக்காய்களின் பன்முக நிறங்களும், ரகங்களும் கொண்ட பல்லுயிர்ப் பெருக்கம் உதவட்டுமே.

கட்டுரையாளர்:

இயற்கை விஞ்ஞானி.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

மாடி, பள்ளிகளில் காய்கறி உற்பத்தி தீவிரம்:தமிழக காய்கறி வரத்தை குறைத்து கேரளா அதிரடி

நாகர்கோவில்:கேரளாவில், தமிழக காய்கறிகளின் பயன்பாட்டை குறைக்கும் வகையில், வீட்டு மாடிகளிலும், பள்ளி வளாகங்களிலும், காய்கறிகள் பயிரிடுவதை, அம்மாநில அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. இதனால், தமிழகத்தில் இருந்து, கேரளாவுக்கான காய்கறி ஏற்றுமதி கடுமையாக சரிந்துள்ளது. தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் காய்கறிகளில், விஷத்தன்மை அதிகமாக இருப்பதாக, கேரளா தரப்பில் கூறப்பட்டு வந்தது. அதிகாரிகள் ஆய்வு:இதையடுத்து, கேரள தோட்டக்கலை துறை அதிகாரிகள் குழுவினர், தமிழகத்தில், காய்கறிகள் உற்பத்தியாகும் இடங்களில் ஆய்வு நடத்தினர். பின், அக்குழு அளித்த அறிக்கையின்படி, கேரள உணவு பாதுகாப்புத் துறை கமிஷனர் அனுபமா, தமிழக வேளாண் பொருள் உற்பத்தி துறை கமிஷனர் ராஜேஷ் லக்கானிக்கு, கடிதம் எழுதினார். அதில், 'பூச்சிக்கொல்லி மருந்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில், இரு மாநில மக்களையும் கடுமையாக பாதிக்கும்' என கூறியிருந்தார். இந்நிலையில், தமிழகத்தில் இருந்து வரும் காய்கறிகளின் பயன்பாட்டை குறைக்கும் நடவடிக்கையில், அம்மாநில தோட்டக்கலைத் துறையும், விவசாயத் துறையும் ஈடுபட்டுள்ளது.

வீட்டு மாடிகளில் தோட்டம் அமைப்பதை ஊக்குவிக்க, பயிற்சி முகாம் நடத்துவதுடன், அதற்கான உபகரணங்களை, மானிய விலையில் வழங்கி வருகிறது. பள்ளிகளில், காலியாக உள்ள இடங்களில், காய்கறி பயிர் செய்து, மார்க்கெட்டில் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

ஏற்றுமதி சரிந்தது:இதற்கிடையில், கன்னியாகுமரி மாவட்டம் வழியாக, திருவனந்தபுரம், கொல்லம் மாவட்டங்களுக்கு செல்லும் காய்கறிகளின் அளவு குறைந்துள்ளதாக, அமரவிளையில் உள்ள, கேரள செக்போஸ்ட் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த மாவட்டங்களில்உள்ள மொத்த தேவையில், 40 சதவீத காய்கறிகள், குமரி மாவட்டம் வழியாக வந்து கொண்டிருந்தது. கடந்த சில மாதங்களாக, இதன் அளவு படிப்படியாக குறைந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்த தடை?தமிழகத்தில் இருந்து வரும் காய்கறிகள், விஷத்தன்மையுடன் இருப்பதாக, கேரளா கருதுகிறது. அளவுக்கு அதிகமாக, உரங்கள் மற்றும் பூச்சிமருந்துகளை பயன்படுத்தி, காய்கறிகளை உற்பத்தி செய்வதால், மக்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என, கேரளா அஞ்சுகிறது. இதனால், முதற்கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து வரும் காய்கறிகளுக்கு, தடை விதித்துள்ளது. விரைவில், ஒட்டுமொத்தமாக, தமிழகத்தில் இருந்து வரும் காய்கறிகளுக்கு, தடை விதிக்கப்படலாம் என, எல்லையில் உள்ள கேரள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

சென்னை:லட்சத்தீவு அருகே உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தென் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த சில தினங்களாக வங்க கடலில் உருவான மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் பெய்து வந்தது. தற்போது லட்சத்தீவு அருகே காற்றழுத்த

தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதனால் தென் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் அதிக அளவில் மழை பெய்யும் எனவும் வடமாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளது.

## தேயிலை தொழிலை ஊக்குவிக்க 100 சதவீத மானியத்துடன் புதிய சலுகை

குன்னூார் : நலிந்து வரும் தேயிலை தொழி லை ஊக்குவிக்க, 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், 100 சதவீத மானியத்துடன் கூடிய புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியதாவது: நாட்டில் தேயிலை தொழிலை ஊக்குவிக்க அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. எஸ்டேட்களில் ஒரு எக்டேரில், தேயி லை மறுநடவு செய்ய, 2 லட்சத்து, 46 ஆயிரத்து, 56 ரூபாய்; கவாத்துக்கு, 61 ஆயிரத்து, 139 ரூபாய்; புதிதாக தேயிலை நடவு செய்ய ஒரு லட்சத்து, 61 ஆயிரத்து, 264 ரூபாய்; நீர்பாசனத்திற்கு, 80 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகின்றன.சிறுதேயிலை உற்பத்தியாளர்களுக்கு மறுநடவு செய்ய ஒரு லட்சத்து, 93 ஆயிரத்து, 517 ரூபாய்; கவாத்து செய்ய 61 ஆயிரத்து 138 ரூபாய்; புதிதாக தேயிலை நடவு செய்ய ஒரு லட்சத்து, 61 ஆயிரத்து, 264 ரூபாய் மானியம் வழங்கப்படுகின்றன.

இயற்கை சார்ந்த ஆர்கானிக் தேயிலை சாகுபடி செய்யவும், தேயிலை சாகுபடியை இயந்திரயமாக்கவும், வழக்கமான முறை யை விட, 25 சதவீதம் கூடுதலாக மானியம் வழங்கப்படுகிறது.சிறு விவசாய சங்கங்கள், 50 ஏக்கருக்கு குறையாமல் தேயிலை தோட்டங்கள் வைத்திருந்தால், வாகனம் வாங்க, 50 சதவீதம் மானியமும், ஒரு எக்டேருக்கு சுழல் நிதியாக, 15 ஆயிரம் ரூபாயும், இடுபொருட்கள் சேமிப்பு மையத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பசுந்தேயிலை கொள்முதல்

மையத்திற்கு, 50 ஆயிரம் ரூபாயும் பசுந்தேயிலை அளவை தராசுக்கு, 3 ஆயிரத்து 500 ரூபாயும், கவாத்து இயந்திரத்திற்கு, 40 ஆயிரம் ரூபாயும் நூறு சதவீத மானியமாக வழங்கப்படுகின்றன.

தேயிலை அறுவடை இயந்திரத்திற்கு, 50 சதவீதமும், கம்ப்யூட்டருக்கு, 80 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது. சிறப்பாக செயலாற்றும் சுய உதவி குழு, சிறு விவசாயி, தேயிலை தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்கு அங்கீகார சான்று மற்றும் ரூ.25 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.எனவே, தமிழகத்தில் நீலகிரி, திருநெல்வேலி, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் வால்பாறை போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் இதனை முறையாக பயன்படுத்தி பயன்பெறலாம். இவ்வாறு, அம்பலவாணன் கூறினார்.

## விஸ்வரூபம்! , காய்கறி விலை உயர்வு , மிரண்டு ஓடும் மக்கள்

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதியில், திடீரென பல மடங்கு உயர்ந்துள்ள காய்கறி விலை பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விளைச்சல் பாதித்து, வரத்து குறைந்தும், தேவை அதிகரித்தும் இருப்பதால், இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

விவசாயத்தை ஆதாரமாகக்கொண்ட பொள்ளாச்சி பகுதியில், தென்னை பிரதான பயிராக இருந்தாலும், கணிசமான அளவு காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. அங்கு விளைந்த காய்கறிகள், பொள்ளாச்சியில் உள்ள காந்தி மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு சந்தைகளில் விற்பனைக்கு வருவது வழக்கம். இங்கிருந்து காய்கறி கடைகளுக்கும், டிபார்ட்மென்ட் ஸ்டோர் களுக்கும் விற்பனைக்கு செல்கின்றன. இங்கு விளையாத கேரட், பீட்ரூட் உள்ளிட்ட சில காய்கறிகள், நீலகிரி மலைப்பகுதியில் இருந்தும், ஒட்டன்சத்திரம் சந்தையில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெரும்பாலான காய்கறிகள்,

திடீரென பல மடங்கு விலையுயர்ந்துள்ளன. கடந்த வாரம், 30 ரூபாய்க்கு விற்பனையான சின்ன வெங்காயம், நேற்று, 45 ரூபாய்க்கு விற்பனையானது. இதே போல 40க்கு விற்ற காலிபிளவர் 80க்கும், 20க்கு விற்ற வெள்ளை முள்ளங்கி 48க்கும், 12க்கு விற்ற புடலை 36க்கும், 32க்கு விற்பனையான பீர்க்கன் 48க்கும், 20க்கு விற்பனையான பீட்ரூட் 40க்கும் உயர்ந்துள்ளது. இதே போல முருங்கை 60லிருந்து 100க்கும், வெண்டைக்காய் 20லிருந்து 40க்கும், அவரைக்காய் 48லிருந்து 80க்கும், பீன்ஸ் 60லிருந்து 80க்கும் கேரட் 32லிருந்து 48க்கும், பாகற்காய் 32லிருந்து 40க்கும், கத்தரிக்காய் 24லிருந்து 40க்கும் உயர்ந்தது. தமிழகமெங்கும் பருவம் தவறி கடந்த மாதம் முழுக்க பெய்த மழையால், பெரும்பாலான காய்கறி பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும், இதனால் காய்கறி வரத்து முற்றிலும் குறைந்து விட்டதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அதே சமயம், அக்னி நட்சத்திரம் முடிந்து, தற்போது திருமண முகூர்த்தங்கள் நடைபெற்று வருவதால், காய்கறிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, வரத்து இன்றியும், தேவை அதிகரித்தும் உள்ளதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, நடுத்தர மக்கள் அன்றாட சமையலுக்கு காய்கறி வாங்கவே தயங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மாநகராட்சி பள்ளிகளில் மாடித் தோட்டம்! மற்ற பள்ளிகளிலும் அமைக்க வேண்டும்



மதுரை : கடந்தாண்டு மதுரை மாநகராட்சி காக்கை பாடினியார் உட்பட நான்கு பள்ளிகளில் மாதிரி மாடித் தோட்டம் அமைக்கப்பட்டது. இந்தாண்டு மற்ற பள்ளிகளிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசும், மாநகராட்சியும் முன்வர வேண்டும். மதுரையில் பல அரசு, மாநகராட்சி பள்ளிகளில் மைதானம் இல்லை. இச்சூழலில் மாணவர்களை உற்சாகப்படுத்த மாடித் தோட்டம் அமைக்கலாம். முறை வைத்து, ஒவ்வொரு வகுப்பாக தண்ணீர் ஊற்றச் செய்யலாம். காய்கறிகளின் வளர்ச்சியை தினமும் பார்ப்பதன் மூலம் வீட்டிலும் காய்கறி செடிகள் வளர்க்க ஆசைப்படுவர். மாடித் தோட்டம் அமைத்துள்ள, காக்கை பாடினியார் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை எழிலரசி கூறியதாவது: கடந்தாண்டு கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை, அவரை, தக்காளி, பச்சை மிளகாய், அரைக்கீரை நட்டோம். கத்தரியில் மட்டும் பத்து கிலோ வரை காய்கள் பறித்தோம். ஆறாம் வகுப்பு மாணவிகள், என்.எஸ்.எஸ்., மாணவிகள் மூலம் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுகிறோம். காய்கள் பறிப்பதும் மாணவிகள் தான்.

இயற்கையாகவே நெல்லை விளைவித்து பயிற்சி அளிக்கிறோம். விளையும் நெல்லை மாணவிகள் பார்த்து சந்தோஷப்படுகின்றனர். தற்போது தான் பள்ளி துவங்கியுள்ளது. இன்னும் ஒருவாரத்தில் விதைகள் வாங்கி மறுபடியும் தோட்டம் அமைப்போம் என்றார்.

## இடம் தேர்வு ! வேளாண் விற்பனை முனையம் துவக்க...: ரூ.135 கோடி கேட்டு அரசிற்கு கருத்துரு

வாலாஜாபாத்: நாவலூர் கிராமத்தில், வேளாண் விற்பனை முனையம் அமைப்பதற்கு, வேளாண் விற்பனை துறை, இடம் தேர்வு செய்து உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு, 135 கோடி ரூபாய் அரசிடம் நிதி கேட்டு, கருத்துரு அனுப்பப்பட்டு உள்ளது.

காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை உள்ளிட்ட, கக மாவட்டங்களில், விவசாயிகள் விளைவிக்கும், விளைபொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்வதற்கு, வேளாண் விற்பனை முனையம் (டெர்மினல் மார்க்கெட்) துவக்கப்படும் என, வேளாண் துறை முதன்மை செயலர், கடந்த இரண்டு ஆண்டு களுக்கு முன்பு அறிவித்து இருந்தார். அதன்படி, ஸ்ரீபெரும்புதுார் தாலுகா, நாவலூர் கிராமத்தில், அரசிற்கு சொந்தமான மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில், 35 ஏக்கர் நிலத்தை வேளாண் விற்பனை துறை நிர்வாகம் தேர்வு செய்துஉள்ளது. நீண்டகால குத்தகை அடிப்படையில், இந்த நிலம் பெறப்படுகிறது. 35 ஏக்கரில்...

வேளாண் விற்பனை முனையம் கட்டுவதற்கு, தேர்வு செய்யப்பட்டுள்ள 35 ஏக்கர் நிலத்தில், வேளாண் விற்பனை துறை மற்றும் தனியார் பொது நிறுவனங்களின் பங்களிப்புடன், பல்வேறு வசதிகளுடன் கூடிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன. இதற்காக, 135 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீடு தயாரித்து, ஒப்புதல் மற்றும் நிதி அளிக்கக்கோரி, வேளாண்

விற்பனை துறை நிர்வாகம், அரசிற்கு கருத்துரு அனுப்பி உள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன், வேளாண் விற்பனை முனையத்தை செயல்படுத்தும் பணிகள் துவக்கப்படும் என, அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும், இம்முனையத்தில், காய்கனிகளை பாதுகாக்க குளிர்சாதன கூடம்; கனி வகைகளை பழுக்கவைக்கும் கூடம்; காய்கனிகள் தரம் பிரிக்கும் கூடம்; மின்னணு ஏலக் கூடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன.

முதற்கட்டமாக...

இதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: வேளாண் விற்பனை துறை மற்றும் தனியார் பொதுத்துறை நிறுவனங்கள் இணைந்து, வேளாண் விற்பனை முனையத்தை செயல்படுத்த உள்ளன. முதல் கட்டமாக, இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. உட்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை மேம்படுத்துவதற்கு, 135 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயாரித்து, அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டு உள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் திட்டப்பணிகள் துவக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## உளுந்து விதைகள் பரிசோதனை வேளாண் அதிகாரி அறிவுரை

வாலாஜாபாத்: 'ஆனி மற்றும் ஆடி பட்டத்தில், உளுந்து விதைக்கும் விவசாயிகள், விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்' என, விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்து உள்ளார்.

விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் கூறியதாவது: ஆனி மற்றும் ஆடி பட்டத்தில் மானாவாரி மற்றும் இறவை உளுந்து பயிர் செய்வதற்கு ஏற்ற பருவமாகும். உளுந்து விதைகள் பொதுவாக, 75 சதவீதம் முளைப்பு திறனும்; 8 சதவீதம் ஈரப்பதமும் இருக்க வேண்டியது அவசியம்.

இதில், வம்பன் 2 முதல் 7 வரையில் உள்ள விதைகள் அதிக முளைப்பு திறன் உடையவை. நிலத்தில், 30 செ.மீ., இடைவெளி விட்டு

விதைத்தால், சராசரியை விட, 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறலாம். சரியான உளுந்து விதைகளை, 75 சதவீதம் முளைப்பு திறன் உள்ளதா என, பரிசோதனை செய்வது அவசியம். இதற்காக, 100 கிராம் எடையுள்ள உளுந்து விதைகளை, காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்தில், நேரிலோ அல்லது தபாலிலோ, 30 ரூபாய் கட்டணம் செலுத்தி, பரிசோதனை செய்து கொள்ளலாம். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

சங்கராபுரத்தில் பலத்த மழை

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் விடிய விடிய மழை பெய்தது. சங்கராபுரம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10:00 மணியளவில் லேசான தூரலாக துவங்கிய மழை, பின்னர் வலுத்தது. அதிகாலை 3 :00 மணி வரை தொடர்ந்து பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர்தேங்கி நின்றது. கரும்பு, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு, இந்த மழை பெரிதும் உபயோகமாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆத்தூரில் 97.6 மி.மீ., மழை பதிவு

ஆத்தூர்: ஆத்தூர் நகர் பகுதியில், நள்ளிரவில் இடி, மின்னலுடன் பெய்த மழையில், 97.6 மி.மீ., மழை பதிவானது. ஆத்தூர், நரசிங்கபுரம் நகர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று முன்தினம், இரவு 11.40 மணியளவில், இடி, மின்னலுடன் மழை பெய்தது. அதிகாலை 2 மணி வரை, மழை தொடர்ந்து பெய்ததால், சாலை, தெருக்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதில், ஆத்தூர் நகர் பகுதியில், 97.6 மி.மீ., மழை பதிவானது. கோடை வெயிலில், மழை பெய்ததால், வெப்பம் தணிந்துள்ளது. மேலும், ஆத்தூர் நகராட்சி, 5வது வார்டு, செல்வம் என்பவரது, ஓட்டு வில்லை வீடு, இடி

தாக்கியதில், ஒரு பக்க சுவர் மட்டும் இடிந்து விழுந்தது. இதுகுறித்து, வருவாய்த்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆத்தூர் பகுதியில், நள்ளிரவில் பெய்த கன மழையால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## தொடரும் மழையால் விவசாயிகள் மகிழச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொடர்ந்து, பரவலாக பெய்து வரும் மழையால், விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த, சில தினங்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு சுமார், 10 மணியளவில் இடி, மின்னலுடன், மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக, பாரூர், 58 மில்லி மீட்டரும், கிருஷ்ணகிரி 55.8, போச்சம்பள்ளி, 51.4, பெனுகொண்டாபுரம், 34.2, சூளகிரி, 22, நெடுங்கல், 17, ஊத்தங்கரை, 16.4 மழையளவு பதிவானது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பள்ளிகளில் மாடி தோட்டம் அமைக்க இலக்கு! சுற்றுச்சூழல் மன்றம் மூலம் திட்டம்

ஈரோடு: இந்தாண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 100 மாடி தோட்டங்களை அமைக்க, மாவட்ட சுற்றுச்சூழல் மன்றம் திட்டமிட்டு உள்ளது. பள்ளி மாணவ, மாணவியருக்கு மரங்களை வளர்த்து, சுற்றுச்சூழலை பேணி காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதன் மூலம், உலக வெப்பமயமாதலை தவிர்க்க முடியும், என்ற நோக்கில், சுற்றுச்சூழல் மன்றம் செயல்பட்டு வருகிறது. இதுகுறித்து மாவட்ட சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் கீதா கூறியதாவது:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், இந்தாண்டு, 359 மாவட்ட சுற்றுச்சூழல் மன்றங்களையும், 250 தேசிய பசுமை படையை உருவாக்க

திட்டமிடப்பட்டுள்ளது. ஈஷா யோகா மையம் சார்பில் "ஸ்கூல் ஜங்கிள்' அதாவது, பள்ளிகளில் மரங்களை வளர்த்து, காடு போன்ற தோற்றத்தை ஏற்படுத்த செய்வது ஆகும். இந்தாண்டு இத்திட்டத்தை செயல்படுத்த, 20 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் பாரம்பரியமிக்க மரங்கள் நடவு செய்யப்படும். கோபி பட்டிமணியக்காரன் பாளையம், மாத்தூர் மாதிரி பள்ளி, சீனாபுரம், பெத்தாம்பாளையம், சித்தோடு அரசு பள்ளி வளாகத்தில் மரங்களை நடவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக பாறையாக உள்ள இடங்கள், வேலியாக மரங்கள் நட, முடிவாகி உள்ளது. மரங்களை வளர்க்க இடவசதி இல்லாத பள்ளிகளிலும், மர வளர்ப்பின் அவசியத்தை மாணவ, மாணவியர் அறிந்து கொள்ளும் வகையில், மாடி தோட்டம் அமைக்கப்படுகிறது.

இடையன்காட்டு வலசு அரசு பள்ளியில், கடந்தாண்டு மாடி தோட்டம் அமைக்கப்பட்டது. கடந்தாண்டு மட்டும், 150 பள்ளிகளில் மாடிதோட்டம் அமைக்கப்பட்டு இருந்தது. இந்தாண்டு, 100 பள்ளிகளில் மாடி தோட்டம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப செடிகள் வளரும்.

விரைவில் மாடி தோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏப்ரல் மாத இறுதி வாக்கில் தேர்வு விடுமுறை துவங்கும். எனவே மாடி தோட்டத்தில், செடிகள் வெயிலில் கருகி காய்ந்து விடும். ஜூன் மாதத்தில் பள்ளி துவங்கியவுடன் கீரை, வெண்டை, கத்தரி உள்ளிட்ட செடிகள் நடவு செய்யப்படும். ஓரிரு மாதங்களில் அதிகளவில் காய்கள் காய்க்க துவங்கி விடும். சத்துணவு மையங்கள் உள்ள பள்ளிகளில் கீரை, காய்கனிகளை மாடி தோட்டத்தில் அமைத்து, சுய தேவையை நிறைவேற்றி கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

மாடி தோட்டங்களில் பெரும்பாலும் இயற்கை உரத்தை மட்டுமே பயன்படுத்த வலியுறுத்தினோம். இதனால், மாணவ, மாணவியர் தங்கள்

வீட்டில் உடைந்த பிளாஸ்டிக் டப்பாக்களில், செடிகளை வளர்ப்பர். சில மூலிகை தாவரங்கள் அன்றாட வாழ்வில் சமையலுக்கு பயன்படுகிறது. மத்திய அரசன் திட்டம் மூலம், சத்தியமங்கலத்தில் மூலிகை தாவர தோட்டம் விரைவில் அமைக்கப்படும். சத்துணவு மையங்களை இலக்காக கொண்டு மக்கும் குப்பையில் இருந்து, எரிவாயு தயாரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஆனால், இதில் மீத்தேன் அளவு குறைவாகவே உள்ளது. குப்பைகள் அதிகளவில் கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைத்தால் திட்டத்தை செயல்படுத்த முடியும். யூனியன் அளவில் சுற்றுச்சூழல் மன்றங்கள், தேசிய பசுமை படை அமைக்க எண்ணியுள்ளோம். இந்தாண்டு அந்தியூர், மொடக்குறிச்சி யூனியன் பள்ளிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. வரும் நாட்களில் பிற யூனியன்களிடலும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## வாழை வணிக வளாகத்தில் 908 வாழைத்தார்கள் ஏலம்

திருச்சி: திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் நடந்த ஏலத்தில், 60 ஆயிரத்து, 670 ரூபாய் மதிப்பிலான, 908 வாழைத்தார்கள் ஏலம் விடப்பட்டது.

திருச்செந்துறை வாழை வணிக வளாகத்திற்கு சென்னக்கரை, குழுமணி, ஆமூர், தொட்டியம், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், பெரியகருப்பூர், சின்னகருப்பூர், அதவத்தூர், அந்தநல்லூர், குளித்தலை, போசம்பட்டி, முள்ளிகுறும்பூர் ஆகிய கிராமங்களில் இருந்து, விவசாயிகள் வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

திருச்சி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். மொத்தம், 908 வாழைத்தார்கள் எவ்வித

தரகுமின்றி, 60 ஆயிரத்து, 670 ரூபாய்க்கு ஏலம் போனது. விவசாயிகளுக்கு, உடனே பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

இந்த ஏலத்தில் ரஸ்தாளி வாழைத்தார் அதிகபட்சமாக, 320 ரூபாய்க்கும், பூவன் அதிகபட்சமாக, 185 ரூபாய்க்கும், பச்சநாடன் அதிகபட்சமாக ,205 ரூபாய்க்கும், மொந்தன், 100 ரூபாய்க்கும், ஏலரிசி அதிகபட்சமாக, 280 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி தார் அதிகபட்சமாக, 110 ரூபாய்க்கும் ஏலம் போனது. அடுத்த வாழைத்தார் ஏலம் வரும், 9ம் தேதி நடக்கிறது. விவசாயிகள் தரமான வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்து, நல்ல விலை பெற்று பயனடையலாம், என மாவட்ட கலெக்டர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## மண்மாதிரி சேகரிப்பு

சிவகங்கை: கண்ணங்குடி வட்டாரத்தில் தேசிய மண்வள இயக்க திட்டத்தின் கீழ் தங்கன் குடியில் மண்மாதிரி எடுக்கப்படுகிறது. களப்பணியாளர்கள் நேரடியாக விவசாய நிலங்களுக்கு சென்று கிராம வரை படத்தின் உதவியால் சாகுபடி நிலங்களை பகுத்து மண் மாதிரி சேகரிக்கின்றனர். பருவமழையை எதிர்பார்த்த கோடை உழவு மேற்கொள்ளும் நேரத்தில் மண்மாதிரிகள் எடுப்பது விவசாயிகளிடம் வரவேற்பு பெற்றுள்ளது. தொடர்ந்து ஒன்றியத்தில் உள்ள புத்தூரணி, சடையமங்கலம், உஞ்சனை, களத்தூர், அனுமந்தக்குடி, ஆகிய கிராமங்களில் மண்மாதிரி சேகரிக்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் சி.சுப்பலட்சுமி தெரிவித்தார். ஆய்வில் விவசாய அலுவலர் குருலட்சுமி, துணை அலுவலர் சப்பானிமுத்து பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பருவமழை குறைவால் உணவு தானிய உற்பத்தி குறையும்**



புதுடெல்லி,

எல் நினோ தாக்கம் காரணமாக இந்த ஆண்டு பருவமழை குறைவாகவே இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நாட்டில் வறட்சி நிலவும் வாய்ப்பு உள்ளதால் உணவு தானிய உற்பத்தியும் குறையும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இருப்பினும் நிலைமையை சமாளிக்க தயார் நிலையில் இருப்பதாகவும் அது சொல்கிறது. இது தொடர்பாக மத்திய விவசாயத்துறை மந்திரி ராதாமோகன்சிங் நேற்று கருத்து தெரிவிக்கையில், ‘‘கடந்த ஆண்டும் மழை குறைவாகவே இருந்தது. இந்த ஆண்டும் மழை குறைவாகத்தான் இருக்கப்போகிறது. உணவு தானிய உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். பருப்பு வகைகள் உற்பத்தியில் 20 லட்சம் டன் பற்றாக்குறை என்பது இந்த ஆண்டும் தொடரும். தேவையான

அளவுக்கு கோதுமை, அரிசி கையிருப்பு உள்ளது. பருப்பு வகைகள் பற்றாக்குறையை, தேவைப்பட்டால் இறக்குமதி செய்து சமாளிப்போம்'' என்று கூறினார்.

**நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழை எதிரொலி: பவானிசாகர் அணை நீர்மட்டம் 2 அடி உயர்வு**



பவானிசாகர்,

நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழைபெய்வதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

<u>பவானிசாகர் அணை</u>

பவானிசாகர் அணை ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. இந்த அணையின் மூலம் கீழ்பவானி வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால், தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மற்றும் பவானி ஆற்றின் வழியாக ஈரோடு மாவட்டத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இது தவிர புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபி,

பவானி நகராட்சிகள், ஏராளமான பேரூராட்சி, சிற்றூராட்சி பகுதிகளின் குடிநீர் தேவையும் பூர்த்தி செய்யப்படுகிறது.

120 அடி உயரம் கொண்ட பவானிசாகர் அணையில் சகதி 15 அடி போக 105 அடிக்கு தண்ணீரை தேக்கிவைக்க முடியும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைபகுதிகளில் பலத்த மழை பெய்யும் போதும் அணைக்கு அதிக அளவு தண்ணீர் வரும் அதேபோல அங்கிருந்து வரும் பவானி, மோயாறும் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியாக உள்ளது.

2 அடி உயர்வு

கடந்த சில மாதங்களாக நீலகிரி பகுதியில் மழை பெய்யாததால் அணையின் நீர்மட்டம் குறைந்த அளவே காணப்பட்டது. மேலும் அணையில் இருந்து பாசனத்துக்கு ஆற்றிலும், வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் மளமளவென சரிந்தது.

இந்தநிலையில் கடந்த ஒரு வாரமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டி, குந்தா, கோத்தகிரி, குன்னூர் உள்ளிட்ட இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 914 கன அடி தண்ணீர் வந்துகொண்டு இருந்தது. அப்போது அணையின் நீர்மட்டம் 64.08 அடியாக இருந்தது. அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு 100 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலுக்கு 5 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் பெய்துவரும் பலத்த மழையின் காரணமாக கடந்த 2 நாளில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

**மதுரையில் 2–வது நாளாக மழை**



மதுரை,

மதுரையில் நேற்று முன் தினம் இரவு 2 மணி நேரத்துக்கும் மேலாக நல்ல மழை பெய்தது. அந்த மழையால் மதுரை நகரமே குளிர்ந்தது. ஆனால் சுற்றுப்பகுதிகளில் உசிலம்பட்டி, சோழவந்தான் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்யவில்லை. பகலில் வானம் மேகமூட்டத்துடனேயே காணப்பட்டது. இரவு 8.45 மணியளவில் கருமேகங்கள் சூழ, இடி–மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இரவு 9.30 மணி வரை சுமார் 45 நிமிடங்கள் மழை நீடித்தது.

இதனால் மதுரை நகர சாலையெங்கும் மழைநீர் வெள்ளமென தேங்கி நின்றது. இதனால் வாகனங்கள் மழைநீரில் தத்தளித்தபடி சென்றன. குறிப்பாக பெரியார் பஸ் நிலையம், ரெயில்நிலையம், தெற்குவாசல், சிம்மக்கல் உள்ளிட்ட பகுதி சாலைகள் அனைத்தும் மழைநீரில் மூழ்கின. இந்த மழைக்கு சேதம் எதுவும் இல்லை என போலீசார் தெரிவித்தனர்.

தினகரன்

**விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி பயிர்க்கடனை முறையாக வழங்க வேண்டும் கூட்டுறவு சங்க பதிவாளர் அறிவுறுத்தல்**

திருச்சி, : விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி பயிர்கடன் மற்றும் நகைக்கடன்களை முறையாக வழங்க வேண்டுமென அலுவலர்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அறிவுரை வழங்கினார். ' ரங்கம் அம்மா மருந்தகம், சோமரசம்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பொது சேவை மையம், பொது விநியோக அங்காடி, அதவத்தூர் நுகர்பொருள் வாணிப கிடங்கு, பொது விநியோக அங்காடி, புங்கனூர் பொதுசேவை மையம் மற்றும் பொதுவிநியோக அங்காடி, சத்திரப்பட்டி பொதுசேவை மையம் மற்றும் பொதுவிநியோக அங்காடியில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஜெய' ஆய்வு செய்தார். அப்போது அவர், விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி பயிர்க்கடன் மற்றும் நகைக்கடன் முறையாக வழங்க வேண்டும்.

தேவையான உரங்கள் இருப்பு வைக்க வேண்டும். பொது விநியோக அங்காடிகளில் குடும்ப அட்டை தாரர்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் விபரங்கள் மற்றும் வரவு, செலவு பதிவேட்டை பராமரிக்க வேண்டும். குறிப்பாக துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு ஆகியவை குறித்த காலத்தில் வழங்க வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் கலெக்டர் பழனிசாமி முன்னிலையில நடந்த பொது விநியோக திட்ட அலுவலர்கள் ஆய்வு கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஜெய' பேசினார். கூட்டத்தில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், மத்திய கூட்டுறவு வங்கி பொதுமேலாளர் மிருணாளினி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராஜேந்திரன், துணை பதிவாளர்கள் பழனீஸ்வரி, வெங்கடலெட்சுமி,

சித்ரா மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு உடனடி இலவச மின் இணைப்பு த.மா.கா விவசாய பிரிவு கோரிக்கை**

திருச்சி, : தமிழகத்தில் குறைந்தபட்சம் 2010ம் ஆண்டு தயார்நிலை பட்டியலில் பதிவு செய்த விவசாயிகளுக்காவது இலவச மின் இணைப்பை உடனடியாக வழங்க வேண்டுமென த.மா.கா விவசாய பிரிவு தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ் மாநில காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில தலைவர் நாகராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் தோட்டம், வயல்களில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளுக்கும் இலவச விவசாய மின் இணைப்பு 1993ம் ஆண்டு முதல் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். கடந்த திமுக ஆட்சியில் 2000ம் ஆண்டு வரை இலவச விவசாய மின் இணைப்புக்கு விண்ணப்பித்து காத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்குவதாக அறிவித்தது. அதற்காக விண்ணப்பத்தில் கேட்டபடி 5 முதல் 15 ஹெச்பி வரை மின்மோட்டார்கள் முன்னதாகவே விவசாயிகள் வாங்கி அதன் விபரங்களை மின்வாரிய அலுவலத்தில் உள்ள தயார் நிலை பட்டியலில் பதிவு செய்தனர். ஆனால் 2011ல் அதிமுக ஆட்சிக்கு வந்தது. திமுக அறிவித்ததுபடி விவசாயிகளுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. ஆனால் அதிமுக அரசு, குறைந்த எண்ணிக்கையில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. இதன் காரணமாக விவசாயிககள் டீசல் என்ஜின் மோட்டார்கள் மூலம் டீசல் போட்டு நீர் இறைவை செய்து விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது டீசல் லிட்டருக்கு ரூ.60 வரை விற்பனையாவதால் விவசாயிகள் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ரூ.720 வரை டீ சலுக்கு ெசலவு செய்கின்றனர். இதனால் விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர்.

எனவே தமிழக அரசு உடனடியாக 2010ல் தயார்நிலை பட்டியலில் பதிவு செய்தவர்களுக்காவது இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கிராமப்புறங்களில் முன்முனை மின்சாரம் மூலம் விவசாயத்துக்கு 3 மணி நேரம் மட்டுமே மின்சாரம் வழங்குகிறது. விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரம் முன்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோடை மழையால் கொழுந்து விட்ட தேயிலை அமோக விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சி**

சின்னமனூர், : கடந்த மாதம் பெய்த கோடை மழையால் ஹைவேவிஸ் மலைப்பகுதியில் தேயிலை அமோக விளைச்சல் கண்டு அறுவடை தீவிரமடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே மேற்கு தொடர்ச்சி மலை வரிசையில் ஹைவேவிஸ், மேகமலை, மணலாறு, மேல்மணலாறு, வெண்ணியாறு, மகராஜன்மெட்டு, இரவங்கலாறு என 7 மலைப்பகுதிகள் உள்ளன.இந்த மலைப்பகுதியில் சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் தேயிலை விவசாயம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது.விளைந்த தேயிலை செடிகளில் கொழுந்துகளை பறித்து, பிறகு பாதுகாத்து தேயிலை தூள்களாக மாற்றுகின்றனர். ஹைவேவிஸ் மட்டுமல்ல... கேரளா, கர்நாடகா, அசாம் போன்ற மாநிலங்களில் விளையும் தேயிலைகளும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். உயரமான மலைப்பகுதிகளில் விளைகின்ற இந்த தேயிலைகளை தூள்களாக மாற்றி டீயாக பருகிடும்போது அதன் சுவையே தனிதான்.

பொதுவாகவே ஹைவேவிஸ் மலைப்பகுதியில் வருடத்திற்கு 8 மாதம் வரை மழை பெய்யும். கோடையில் ெபரும்பாலும் விளைச்சல் சொல்லும்படி இருக்காது. கடந்த மாதம் தேனி மாவட்டம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கோடை மழை பரவலாக பெய்தது.

இதனால் இப்பகுதிகளில் கண்மாய்கள், ஆறுகள், அணைகளில் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. நிலத்தடி நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதனால் மானாவாரி மற்றும் கோடையில் பயிரிடும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த மழையால் தேயிலையும் அமோக விளைச்சல் கண்டுள்ளது. தேயிலை செடிகளில் கொழுந்துகள் தூர் விட்டு முளைத்துள்ளது. தற்போது தொழிலாளர்கள் முழுமூச்சாக கொழுந்துகளை பறிப்பில் தீவிரமாக உள்ளனர்.எதிர்பார்த்ததை விட விளைச்சல் பல மடங்கு உயர்ந்துள்ளதால் விலை குறையும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.